பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நினைவு: 1953 ★ விலை 7 நாப ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எல்

மலர்: 20] சென்னை: ஆனி 14 (30—8—72) புதன் வெளியீடு: ஆனி 15 (31—8—72) வியாழன் [இதழ்: 65

ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி

ஆராயக் குழு அமைப்பு

புதுடில்லி, ஆக. 30— ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி அளிப்பதற்கான திட்டங்களை வகுக்க, திரு. வி.கே. கிருஷ்ண அய்யர் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்திருக்கிறது.

நீதிமன்றங்களில் தாமதமாகாமல் வழக்குகளை விரைவில் முடிப்பதற்கான யோசனைகளையும் இந்தக் குழு தெரிவிக்கும்.

இந்தித் திணிப்பு-நாட்டுக்கே அழிவு

கோடிக்கணக்கான மக்களின் கோபத்தைக் கிளறும் போக்கு

விளைவுகளை உணராத மேலிடத்தவர்களே கிளர்ச்சிக்கு வித்தூன்ற முயற்சிக்கின்றனர்

'இந்திய ஒற்றுமை சீர்குலையுமோ என்ற அச்சம் எங்கணும் காணப்படுகிறது' --கே.பி. கேசவ மேனன் விளக்க அறிக்கை

கோழிக்கோடு ஆக. 30—

"இந்தியாவிலுள்ள நியாய உள்ளம் கொண்ட பலரது மனத்திலும் நீண்ட காலமாக ஓர் அச்சம் இருந்து கொண்டே வருகிறது.

"இந்தி மொழியை நிர்ப்பந்தமாகவும் விரைவாகவும் மத்திய அரசு திணித்துவரும் வேகம் காரணமாக 'இந்திய ஒற்றுமை குலைந்துவிடுமோ' என்பதுதான் அந்த அச்சமாகும்.

"அண்மையில் நான் 'தாமிரப் பட்டயம்' பரிசு பெற டெல்லிக்குச் சென்றிருந்தபோது ஏற்பட்ட அனுபவம் இந்த அச்சத்தை வலுப்படுத்துவதாகவே அமைந்துவிட்டது!

"இந்தி பேசாத பகுதியிலுள்ள மக்கள்மீது மத்திய அரசு மிகத் தீவிரமாக இந்தியைத் திணிக்கிறது! இதனால் இந்தியாவுக்கு அழிவுதான் ஏற்படப் போகிறது!"

என்று, பிரபல மலையாள நாளேடான மாதருபூமி'யின் தலைமை ஆசிரியரும் -- முன்னாள் இலங்கைத் தூதுவருமான திரு. கே. பி. கேசவ மேனன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்; அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"'தாமிரப் பட்டயம் வழங்கும் நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக்குப் பொறுப்பானவர்கள், திட்டமிட்டு -- வேண்டுமென்றே இந்தி பேசாத மக்களின் ஆத்திரத்தைக் சீண்டும் வகையில் செயல்பட்டிருக்கின்றனர்.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பலரும், இந்தி தெரியாதவர்களாக இருந்தனர்; ஆயினும், நடைபெற்ற நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இந்தியிலேயே நடத்தப்பட்டன.

விழா குறித்து விளக்கம் தந்த அமைச்சர் கே. சி. பந்த் இந்தியிலேயே பேசினார்; ஒரு சில நிமிடங்கள் மட்டும் ஆங்கிலத்தில் பேசினார்.

இந்தியில்பேசிய தலைமையமைச்சர், பிறகு சுருக்கமாக ஆங்கிலத்தில் பேசியமோதிலும், நிதியமைச்சர் சவான்-- அமைச்சர் பகுகுணா மோன்றோர் இந்தியிலும் மட்டுமே பேசினர்.

இப்த நிகழ்ச்சியில் கவுரவிக்கப் பட்ட பலரும், மட்டயத்தில் பொறிக்கப்பட்டிருந்த இந்தி எழுத்துக்களைக்கண்டு ஆத்திரமைடைந்தனர்!

குடியரசு நாளன்று செங்கோட்டையில் கொடியேற்றி வைத்துப் பேசிய தலைமையமைச்சர் இந்தியிலேயே பேசினார்.

இப்படிப்பட்ட செயல்கள் டெல்லியில் உள்ள பொறுப்பானவர்களின் அலட்சியத் தன்மையையே வெளிப்படுத்துகின்றன!

மேலும், இந்திய நாட்டு மக்கள் உண்மையாகவே நாட்டு ஒருமைப்பாடு குறித்துக் கவலைப் படுகிறார்களா என்ற சந்தேகத்தையும் எழுப்புகிறது!

இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக -- சண்டையும் சச்சரவும் இல்லாமல் வரவேண்டுமென்று விரும்புபவர்களாக இருந்தால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பொறுமையுடனும், அமைதியுடனும் இருந்து வரவேண்டியது அவசியமாகும்.

மூன்றாவது வகுப்புப் பயணிகள் மூலம்

ரூ. 258 கோடி வருமானம்

புதுடில்லி, ஆக. 30—

"1970--71-ம் ஆண்டில் இந்திய இரயில்வேக்களுக்கு மூன்றாவது வகுப்புப் பயணிகள் மூலம் கிடைத்த வருமானம் ரூ 258 11 கோடியாகும்.

"மற்ற வகுப்புப் பயணிகளின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 37 38 கோடியாகும்"

என்று இரயில்வே துணையமைச்சர் ஷாபி குரேஷி, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

நாட்டின் அமைதியைக் குலைக்கும் வகையில், மொழிப் போர் மீண்டும் தலைதூக்காதிருக்க வேண்டுமானால், டெல்லியில் பொறுப்பானவர்கள் தாங்கள் செய்வது என்ன விளைவுகளை உண்டாக்கும் என்பதையும், இந்தி தெரியாத கோடிக்கணக்கான மக்களின் கோபத்தைக் கிளறாமல் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதையும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது அவசியமாகும்."

எதிர்காலத்தை உணர்ந்தோம்- திட்டத்தைச் செயல்படுத்தினோம்!

சென்னை, ஆக. 30—

'சத்துள்ள உணவு உட்கொள்ளாமை மெல்லாமல்லாததன் காரணமாக நம் நாட்டு மக்களில் பெரும்பாலோருக்குக் கண்ணில் பலவீன நோய் ஏற்படுகிறது!

'சத்துணவு உட்கொள்ளாத தன் காரணமாக மட்டுமன்றி பெருங்கிய உறவு திருமணத்தின் காரணமாகவும் இனத்தின் வளர்ச்சி தாழ்ந்து கண்பார்வை மங்குகிறது!

'கண்ணொளி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியிருக்காவிட்டால், இன்னும் சில ஆண்டுகள் கழிந்து 25 இலட்சம் பேர் கண்பார்வையற்றவர்களாகி விடுவார்கள்; அதை உணர்ந்தே இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டிருக்கிறது."

- பேராசிரியர் க. அன்பழகன்

(அம்பத்தூர் கண் நிகிச்சை முகாம் நிறைவு விழாவில்)

டிக்கெட்டின்றி இரயில் வேக்களில் பயணம் செய்வோர்

விவசாயிகள் -- வணிகர்கள் -- தொழிலாளர் சதவிகித தகவல்

புதுடில்லி, ஆக. 29—

"இந்திய இரயில்வேக்களில் டிக்கெட்டின்றிப் பயணம் செய்பவர்களில் விவசாயிகளே பெரும்பான்மையினராவர்"

என்பது, ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

டிக்கெட்டின்றிப் பயணம் செய்பவர்களில் 32 சதவிகிதத்தினர் விவசாயிகளாவர்.

அடுத்ததாக, வணிகசமூகத்தினர் 28 சதவிகிதத்தினரும், தொழிலாளர்கள் 22 சதவிகிதத்தினரும் ஆக இருக்துள்ளனர்.

மற்றும் டிக்கெட்டின்றிப் பயணம் செய்பவர்களில் பிச்சைக்காரர்கள் 12 சதவிகிதத்தினராகவும், மாணவர்கள் 9 சதவிகிதத்தினராகவும், ஏனையோர் 2 சதவிகிதத்தினராகவும் இருக்கின்றனர்.

சுமார் ரூ 20 கோடியிலிருந்து ரூ. 25 கோடி வரையில் இதனால் இரயில்வேக்கு இழப்பு ஏற்படுகிறதாம்.

எம்.எல்.ஏ.-க்கள் -- எம்.பி.-க்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டம்

'தேர்தல் நடைபெற்ற நாளிலிருந்தே செயல்படுத்தப்பட வேண்டும்'

தி. மு. கழகத்தின் கருத்து பற்றிக் கலைஞர் விளக்கம்

திருச்சி, ஆக. 30—

கட்சிவிட்டுக் கட்சி மாறும் எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் தொடர்ந்து சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களாக நீடிக்காமல் தடுப்பதற்கு வகை செய்யும் சட்டத்தை மத்திய அரசு தயாரித்துவருகிறது. இந்தச் சட்டத்திற்படி, கட்சி மாறும் உறுப்பினர்கள், பதவியை இழந்துவிட்டு மறுதேர்தலுக்கு நிற்க வேண்டும்; இப்போது நடைபெறவுக்கொண்டிருக்கும் நாடாளுமன்றத் தொடரிலேயே இந்தச் சட்டம் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'இந்தச் சட்டத்தை 1971 பொதுத் தேர்தல் நடைபெற்ற நாளிலிருந்தே செயலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே தி. மு. கழகத்தின் கருத்தாகும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், செய்தியாளரிடம் தெரிவித்தார்; திருச்சியில் அவரைச் சந்தித்த செய்தியாளர்கள், 'நாடாளுமன்றத்தில், கட்சி மாறுவதைத் தடுக்கும் சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறதே -- அதுபற்றி உங்கள் கருத்தென்ன?' என்று வினவினர்; அதற்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறிய தாவது:—

"அது தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர்களின் பிரச்சினையாகும்; ஆகவே, தேர்தல் நடந்த நாளிலிருந்தே (1971-ம் ஆண்டிலிருந்தே) செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் தி. மு. கழகத்தின் யோசனையாகும்; உதாரணமாக நிலச் சீர்திருத்தச் சட்டம் எந்த முறையில் செயல்படுத்தப்பட்டதோ -- அதேபோல் இந்தச் சட்டமும் செயல்படுத்தப்பட வேண்டும்."

போலீசாருக்கு அண்ணா பதக்கம் வழங்கும் விழா

செப். 13-ல் காஞ்சியில் நடைபெறும்

மேலும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதிலகளும் வருமாறு:—

கேள்வி:—"சிறந்த போலீசுக்கான அண்ணா பதக்கம் எப்போது வழங்கப்படும்?"

பதில்:—"சிறந்த போலீசுக்கான அண்ணா பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுவதுபோல் இந்த ஆண்டும் செப். 13-க் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்; தமிழ்நாடு தலைமை போலீசு அதிகாரி

(4-ம் பக்கம் பார்க்க)

முன்னேற்பாடு திட்டங்களை நாம் வகுத்தாக வேண்டும்

கண்ணொளி வழங்குவது மட்டுமே நமது குறிக்கோள் அல்ல --- வாழ்விலேயும் ஒளியேற்ற விரைந்து செயல்பட்டு வருகின்றோம்

ஆதரவற்றவர்களுக்கு ஊன்றுகோல் திட்டம் -- பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

கல்லக்குடியில் முதலமைச்சர் கலைஞர் கனிவுரை

திருச்சி, ஆக. 30—

"தமிழ்நாட்டில் ஏறத்தாழ பத்து இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கண்ணொளி குன்றியவர்களாக -- நகர்ப்புறங்களிலே குறைவாகவும், கிராமப்புறங்களில் அதிகமாகவும் இன்றைக்கு இருக்கின்றனர்; அப்படிப்பட்டவர்களுக்கு ஊன்றுகோலாக இருக்கத்தக்க வகையிலேதான் கண சிகிச்சை முகாம் திட்டத்தை நாம் துவக்கியிருக்கிறோம்.

"குழந்தைப் பருவத்திலேகூட நல்ல சத்துணவு வழங்கப்பட்டாக வேண்டும்; இளமைப் பருவத்தில் புரதச் சத்துள்ள உணவு உட்கொள்ளாத காரணத்தால்தான், வயதான காலத்திலே கண்ணொளி மங்குகிறது; ஆகவே, இவற்றுக்கெல்லாம் முன்னேற்பாடான திட்டங்களை நாம் வகுத்தாக வேண்டும்.

"அறுவைச் சிகிச்சை செய்து கண்ணொளி பெற்றவர்களில் பல பேர் ஒரே ஆடையோடு -- அழுக்கடைந்த ஆடையோடு இருந்தனர் என்று வேதனைதோய்ந்த உள்ளத்துடன் சொன்னார்கள்; அப்படித்தான் பல தரப்பட்டவர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் கண்ணொளி வழங்கினால் மட்டும் போதாது -- வாழ்விலேயும் ஒளி வழங்கியாக வேண்டும்; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதுபற்றி நினைக்கத் தொடங்கி -- செயல்படத் தொடங்கி ஐந்தாண்டுக் காலமாகிறது; ஆனால், பெரியவர்களெல்லாம் இப்போதுதான் நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள் -- நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்; நம்முடைய செயல் வெற்றிகரமாக நிறைவேறுவதற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு கிடைத்தாக வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கல்லக்குடி கண் சிகிச்சை முகாமில் கண்ணொளி பெறுவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கிப் பேசுகையில் கட்டிக்காட்டுக் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

"பத்து இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்கவேண்டும் என்கின்ற தீவிரத் திட்டத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு மாத்திரம் ஒர் இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்குவதென்று திட்டம் தீட்டி -- அந்தப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

"பத்து இலட்சம் பேருக்கு இந்த இரண்டாண்டுக் காலத்தில் கண்ணொளி வழங்கிவிடுவோம் -- என்று மருத்துவர்கள் மார்தட்டிக் கொண்டு வருவார்களானால், அவர்களுடைய கையைக் குலுக்கி -- இன்னமுதத்தோடு வரவேற்று, 'உங்களுடைய பணியை மேற்கொள்ளுங்கள்' என்று சொல்கின்ற அரசுதான் இன்றைக்கு இருக்கிறது; 'ஆகட்டும் -- பிறகு பார்க்கலாம்' என்று சொல்கின்ற அரசல்ல இது' என்றுதை நினைவுறுத்துகிறேன்.

"நாம் உருவாக்குகின்ற திட்டங்களை எல்லாம் யாரோ சிலர் கேலி பேசுகிறார்கள்; 'எதுவும் செய்யமுடியாதவர்கள் அதையாவது செய்யட்டுமே' என்று நாம் விட்டுவிட வேண்டும்.

"குமாரமங்கலியத்திலே கிட்டத்தட்ட ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன; ஆனால் சில மருத்திரிகைகளிலே 'ஆயிரம் பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்க இலட்சம் ரூபாய் செலவா? ஒரு கண்ணாடி ரூ 15 என்றாலும் ஆயிரம் கண்ணாடி பதினைந்தாயிரம் ரூபாய்தானே ஆகும்? இது என்ன தவறான கணக்கு?' என்றெல்லாம் எழுதினார்கள்!

"ஒரு கண் நோயாளிக்கு சாப்பாட்டு வசதி -- அறுவைச் சிகிச்சை செய்வதற்கு ஆகின்ற செலவு -- அந்தப் பணியில் ஈடுபடுகின்ற மருத்துவர்கள், அரசாங்கப் பணியாளர் மற்றமற்ற தொண்டர்களுக்கு இடவசதி -- இவைகள் அனைத்தையும் கணக்கில் எடுக்கவேண்டுமானால், ஒரு நபருக்கு கிட்டத்தட்ட ரூ 50-லிருந்து ரூ 60-வரை செலவாகிறது; அம்படிச் செலவாகின்ற காரணத்தால்தான், இந்த முகாமிலே இரண்டாயிரம் பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை நடைபெற்று பிறகு கண்ணாடி வழங்கியிருக்கிறோம்.

"பத்திரிகைகளில்கூடச் செய்திகளைப் புரிந்துகொள்ளாமல் யோடுகிறார்கள் என்று கருதுகிறேன்; இது, கண்ணாடி வழங்குகின்ற விழா அல்ல -- கண்ணொளி வழங்குகின்ற விழாவாகும்.

"கண்ணாடிகளை ஏன் அணிவிக்கிறோம் என்றால், 'கண் ஒளி பெறுவதற்குக் கண்டீர் சயாராகிவிட்டன -- அரைச் சரியான ஒளியாக ஆக்கு வதற்கு இந்தக் கண்ணாடிகள் அணிவிக்கப்படுகின்றன' என்பதால்தான்.

"அறுவைச் சிகிச்சை இரண்டாயிரம் பேருக்குச் செய்யப்பட்டிருக்கிறது; இது சாதாரண விவகாரமல்ல!

"திட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இந்த முகாம்களை நடத்துகின்ற வெங்கடசாமி குழுவினர், திருவாரூரில் 2,035 பேர்களுக்கும், குமாரமங்கலியத்தில் 1,051 பேர்களுக்கும், கோயிலில் 2,102 பேர்களுக்கும், எழுமலையில் 847 பேர்களுக்கும், திருச்செந்தூரில் 320 பேர்களுக்கும், கல்லக்குடியில் 2167 பேர்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கியிருக்கின்றனர்!

"இதன்னியில், கண்களிலே இருக்கின்ற சங்கடங்களை எடுத்துச் சொல்லி அதற்காக மருந்து பெற்றுக் கொள்கிறவர்கள் -- கண்ணாடி மாத்திரம் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற வாரத்தில், திருவாரூரில் 15 015 பேர் -- குமாரமங்கலியத்தில் 5,048 பேர் -- கோயிலில் 10,693 பேர் -- எழுமலையில் 4,650 பேர் -- திருச்செந்தூரில் 4 699 பேர் -- கல்லக்குடியில் 14 328 பேர் -- ஆக மொத்தம் 54,433 பேர் வெளி நோயாளிகளாவர்.

"நான் சொல்லுகின்ற ஓர் இலட்சத்தில் இந்த 54,000 பேர் கணக்கில் சேர மாட்டார்கள்.

"நான் சொல்லுகின்ற ஓர் இலட்சம் பேர்களும் அறுவைச் சிகிச்சை முடிந்து கண்ணாடி பெற்றுக் கண்ணொளி பெறுகின்றவர்கள் தான்; அப்படியல்ல மக்கள்தான் தமிழகத்திலே 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள்; அந்த 10 இலட்சம் பேர்களில் இந்த ஆண்டில் ஓர் இலட்சம் பேர் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

"இந்தாறு ஆண்டுக் காலத்திலே அந்தப் பத்து இலட்சம் மக்களுக்கும் கண்ணொளி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செய்து முடிக்கும் என்ற உறுதியைத் தெரிவிக்கிறேன்.

"10 இலட்சத்தோடு இது முடிந்துவிடுமா என்றால் இல்லை; பிறகும் கூட கொஞ்சம் சேரலாம்; ஏனென்றால், வயதாக வயதாக பார்வை மங்குவது இயல்தானே.

"இளம் பருவத்திலேகூட மார்வை மங்குகிறது; நாமெல்லாம்கூடமலை போர் கண்ணாடி போட்டுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகிறது!"

திரைப் படங்களை ஏற்றுமதி செய்வதில் சிரமங்கள்

கழக உறுப்பினர் காலநாதன் கேள்விக்கு அமைச்சர் பதில்

புதுடில்லி, ஆக. 29—

"தமிழ்ப் படங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதில் செய்வதில் சிரமங்கள் இருப்பது உண்மையா? திரைப்படங்களை மத்திய அரசின் வர்த்தக நிறுவனம் (ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்) மூலம் அனுப்பினால் என்ன?"

என்று நாடாளுமன்ற, மேலவையில், கழக உறுப்பினர் எம். கமலநாதன் கேட்டார்.

இதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மிஸ்ரா கூறியதாவது:—

"திரைப்படங்கள் ஏற்றுமதியை மத்திய அரசின் இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கார்ப்பரேஷன் மூலம் நடத்த ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது; ஆனால் அந்த நிறுவனத்தில் தனிப்பட்ட ஒரு சிலருக்குப் பங்கு இருப்பதால், அதன் மூலம் பட ஏற்றுமதி செய்ய உரிமை இல்லை என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

எனவே, தனியார் பங்குகளை நீக்கிவிட்டு -- அதை முழுக்க முழுக்க மத்திய அரசு நிறுவனமாக மாற்றப்போகிறோம்; அதன் பிறகு, அந்த நிறுவனம் மூலம், திரைப்படங்கள் ஏற்றுமதி செய்யப்படும்."

தேசிய ஊதிய கொள்கை

நாடு முழுவதற்குமாக வகுக்கப்படக்கூடும்

தலைமையமைச்சர் கருத்து

புதுடில்லி, ஆக. 29—

நாடு முழுவதுக்குமாக ஒரு தேசிய ஊதியக் கொள்கையை வகுப்பதுடன், இன்றியமையாப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் மத்திய அரசு வகுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

இன்றியமையாப் பொருட்களைச் சீராக விநியோகிப்பதற்காகப் பல இன்றியமையாப் பொருள் வாரியங்களை அமைக்கவும் மத்திய அரசு திட்டமிட்டு வருகிறதாம்.

இது குறித்த முடிவுகள் ஒரு சில வாரங்களில் அறிவிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் சில தொழிற்சங்கத் தலைவர்கள் தலைமையமைச்சரைச் சந்தித்தபோது தலைமையமைச்சர், பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதால் பிகவும் கவலை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

"விலை உயர்வுக்கேற்ப, அவ்வப்போது ஊதிய உயர்வு அளிப்பதற்குப் பதில், ஒரு தேசிய ஊதியக் கொள்கை வகுப்பது மிகவும் பயன்படும்" என்ற கருத்தைத் தலைமையமைச்சர், அவர்களிடம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

சேது சமுத்திரத் கால்வாய் திட்டம்

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 29—

"சேதுக் கால்வாய்த் திட்டத்தை மத்திய திட்டக் குழு ஏற்கும்படிச் செய்வதே என்னுடைய ஆழ்ந்த விருப்பமாகும்"

என்று கப்பல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜாராமதுரை, நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் எம். கமலநாதன் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"வங்கக் கடலிலிருந்து அரபிக் கடலுக்குச் செல்லவேண்டிய கப்பல்களுக்கு மடங்கு தூரத்தை கணிசமாகக் குறைக்க சேதுசமுத்திரக் கால்வாய் அவைவது உதவும்" என்று கழக உறுப்பினர் தெரிவித்த கருத்தை அமைச்சர் ராஜாராமதுரை ஏற்றுக்கொண்டார்.

"நாட்டின் இதர துறைகளின் தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்துக்காக எவ்வளவு நிதி ஆதாரங்களை திரட்ட முடியும் என்பதைக் கண்டறிய வேண்டும்; இதுவே இப்போது நம் முன் உள்ள பிரச்சினையாகும்"

என்று அமைச்சர் ராஜாராமதுரை தெரிவித்தார்.

பாகிஸ்தான் குடிமக்கள்

பண உதவி பெற இந்தியா அனுமதி

புதுடில்லி, ஆக. 30—

சென்ற டிசம்பரில் இந்தியாவுக்கும் -- வங்காளதேசத்துக்கும் இடையே ஏற்பட்ட போரை அடுத்து வங்க தேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இந்தியாவில் பல்வேறு முகாம்களிலும் வைக்கப்பட்டுள்ள 16213 பாகிஸ்தான் குடிமக்கள், பாகிஸ்தான் உட்பட உலகில் எந்த நாட்டிலிருந்தும் உறவினர்கள் -- நண்பர்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்கீழ் இவர்கள், இந்தியாவிலுள்ள உறவினர்கள் -- ரூ. 18,000-மும் வாகிஸ்தான் நீங்கலாக இதர நாடுகளில் உள்ள உறவினர்கள் -- நண்பர்களிடமிருந்து ரூ 3,000-மும் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து எந்த உதவியையும் எவரும் பெறவில்லை.

இந்தியாவில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானியர்களுக்கு அங்காட்டில் தனிப்பட்டவர்கள் பணம் அனுப்புதற்குப் பாகிஸ்தான் அரசு ஒத்துழைப்பு அளிக்கத் தீர்மானித்துள்ளதாக எந்தவிதமான அறிகுறியும் காணப்படவில்லை.

இவர்களுக்கு இத்தகைய நிதி உதவியை அனுப்பி வைக்க சௌதியிலுள்ள சங்க சர்வதேச கமிட்டி அவசியமான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பாகிஸ்தான் குடிமக்களுக்கு உணவு -- உடை, மருத்துவ உதவி மற்றும் இதர வசதிகளையும், கைச்செலவுக்குப் பணமும் இந்திய அரசு வழங்கிவருகிறது; இதைத் தவிர, உறவினர்கள் நண்பர்களிடமிருந்து பணம் பெறவும் அரசு அனுமதித்துள்ளது.

மத்திய அமைச்சரின் வேதனைமிக்க விளக்கம்---

உண்மை நிலையை உணருகிறார் ஒய். பி. சவாண்

வளர்ச்சியின் பயன் யாருக்கு கிட்டியது?

பெரும்பாலான மக்கள் இன்னமும் வறுமையால் வாடுகின்றனர்

வேலையில்லாத் திண்டாட்டம் பொருளாதார --- சமுதாயப் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது

சென்னை, ஆக. 30—

"வளர்ச்சியின் பயன்கள் -- எதிர்பார்த்ததைப் போன்று -- எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கவில்லை; பெருந்திரளான மக்கள் இன்னமும் வறுமையில் வாடுகிறார்கள்; வேலையில்லாத் திண்டாட்டம் பல பொருளாதார -- சமுதாயப் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

"வளர்ச்சி விகிதத்தைத் துரிதப்படுத்துவது -- வேலையின்மையையும், ஏழ்மையையும் அகற்றுவது -- பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமுதாய நீதியை ஏற்படுத்துவது ஆகியவை இன்று நம்முன் நிற்கும் மாபெரும் பணிகளாகும், இந்தப் பணியில் நாம் வெற்றி பெறுவதற்குத் தொழிலாளர்களும் -- தொழில் அதிபர்களும் -- அரசும் -- பொதுமக்களும் முழுமூச்சுடன் ஒத்துழைக்க வேண்டும்"

என்று மத்திய நிதியமைச்சர் ஒய். பி. சவாண், இங்கு ஏற்றுமதிச் சீரமைப்புப் பற்றிய கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில், சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

சமநிலையை எப்படி உறுதி செய்வது?

"ஏழ்மை -- தேவை -- பொருளாதாரம் பின்னமையை ஆகியவற்றுக்கு எதிரான போரில் ஏற்றுமதிகள் மிக முக்கியப் பங்காற்ற வேண்டியிருக்கின்றன; நாம் திட்டமிட்டு வரும் தொழில் வளர்ச்சி -- அதிகரித்த வேலைவாய்ப்பு ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு வெளிநாடுகளிலிருந்து பல பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது; ஆனால் வெளியுறவு நிச்சயமற்ற நிலையில் இருக்கிறது; தன்னிறைவுக் கொள்கையே சிறந்தது என்றதை அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு நிரூபித்துக் காட்டின; இறக்குமதிப்பட்டியலை மக்களுக்கு தேவையான அளவுக்கு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலமும் -- ஏற்றுமதி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலமும்தான் வர்த்தகச் சமநிலையை உறுதி செய்ய முடியும்" என்றும் அவர் கூறினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

ஏற்றுமதி வளர்ச்சிக்கு என்ன தடை?

"இன்று மரபான சொருட்கள் மட்டுமின்றிப் பலவித நவீன சொருட்களும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகின்றன; ஆனால் விடுதலைக்குப் பின்னர், புதிய சொருட்களின் உற்பத்தி நலையங்கள் அதிகரித்திருப்பினும், இவற்றின் ஏற்றுமதி குறைவாகவே உள்ளது; சொருள்களான சொருட்கள் இந்தியாவிலேயே விற்கப்படுகின்றன; உள்நாட்டிலேயே சொருட்களின் விற்பனை மாதுகாப்பான தாகவும் சலுமானதாகவும் இருப்தால் இதுவே நமது ஏற்றுமதியின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.

பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி அவசியம்

"உற்பத்தியை அதிகரிப்பதால் மட்டும் ஏற்றுமதியைப் பெருக்கிட முடியாது; ஏனெனில், உற்பத்தியும் -- உள்நாட்டில் வருமானமும் அதிகரிக்க தேவையான அளவுக்கு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலமும் -- ஏற்றுமதி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலமும்தான் வர்த்தகச் சமநிலையை உறுதி செய்ய முடியும்" என்றும் அவர் கூறினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"உற்பத்தியை அதிகரிப்பதால் மட்டும் ஏற்றுமதியைப் பெருக்கிட முடியாது; ஏனெனில், உற்பத்தியும் -- உள்நாட்டில் வருமானமும் அதிகரிக்க தேவையான அளவுக்கு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலமும் -- ஏற்றுமதி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலமும்தான் வர்த்தகச் சமநிலையை உறுதி செய்ய முடியும்" என்றும் அவர் கூறினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இன்று மரபான சொருட்கள் மட்டுமின்றிப் பலவித நவீன சொருட்களும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகின்றன; ஆனால் விடுதலைக்குப் பின்னர், புதிய சொருட்களின் உற்பத்தி நலையங்கள் அதிகரித்திருப்பினும், இவற்றின் ஏற்றுமதி குறைவாகவே உள்ளது; சொருள்களான சொருட்கள் இந்தியாவிலேயே விற்கப்படுகின்றன; உள்நாட்டிலேயே சொருட்களின் விற்பனை மாதுகாப்பான தாகவும் சலுமானதாகவும் இருப்தால் இதுவே நமது ஏற்றுமதியின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.

பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி அவசியம்

சென்னையில் விற்பனைக்கு வந்த மருந்து பற்றி ஐயம்

பொதுமக்களுக்கு அரசு எச்சரிக்கை

சென்னை, ஆக. 30—

சென்னையில் விற்பனைக்கு வந்த குழந்தைகளுக்கான மருந்து பற்றி ஐயம் ஏற்பட்டிருப்பதால், அந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மருந்தில் தவறுதலாக நச்சுச் சத்து கலந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது; ஆகவே, அந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டாமென்றும், அம்மருந்தை வைத்திருப்பவர்கள், மருந்துத் துறை அதிகாரியிடம் அதனை ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் டாக்டர்களும் — பெற்றோர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கு ஆனுமதிக்த டாக்டர்கள், உடனே தங்களுடைய நோயாளிகளுடன் தொடர்பு கொண்டு அந்த மருந்தை வாங்கிவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

காய்ச்சலைத் தணிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட மருந்தைக் கொடுத்ததனால் பாதிக்கப்பட்ட சில குழந்தைகள் எழும்பூரிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டன; மோசமான நிலையில் சேர்க்கப்பட்ட அந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் பயனில்லாமல் நோய்விட்டது.

காய்ச்சலுக்காக அந்தக் குழந்தைகளுக்கு, 'பிமாக்' என்ற மருந்தைத் தனியார் டாக்டர்கள் கொடுக்கும்படி சிபாரிசு செய்திருந்தனர்; அந்த மருந்தைக் குடித்த 14 குழந்தைகளுக்கு நோய் முற்றி -- பின்னர் எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர்; அங்கு அந்தக் குழந்தைகள் இறந்தன.

அல்லது ஐந்து நாட்களில் இறந்துவந்தன.

எழும்பூரில் உள்ள தாய்-சேய் நல மருத்துவமனையில் ஒவ்வொரு கிழமையும் நடைபெறும் டாக்டர்கள் கூட்டத்தில் இந்தப் புதிய வகையான நோய் -- இறப்பு குறித்து டாக்டர்களுக்குச் சர்ச்சை நடக்கும் ஏற்பட்டது; மருத்துவமனையில் அனுமதிப்பதற்குமுன் என்ன சிகிச்சை தரப்பட்டது என்று விசாரித்தபோது, 'பிமால்' என்னும் இந்த மருந்து அந்தக் குழந்தைகளுக்குத் தரப்பட்டது தெரியவந்தது; உடனே அந்த மருந்தைக் கைப்பற்றவும், விநியோகிக்காமல் இருக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரி இம்மருந்து முழுவதையும் கைப்பற்றித் தேவையான மேல் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள்; சட்டப்படி எடுக்கக் கூடிய மற்ற நடவடிக்கைகள் தொடருகின்றன.

அரசாங்க மருத்துவமனைகள் இந்த மருந்தை வாங்காவிடில்—குழந்தைகளுக்குக் கொடுக்கவும் இல்லை.

தனியார் டாக்டர்கள் எவரும் இந்த மருந்தைச் சிபாரிசு செய்ய வேண்டாம்--மருந்துக் கடைகளிலும் விற்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த மருந்து கிண்டியிலுள்ள 'கிங் இன்ஸ்டிடியூட்'டின் சோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; அதன் அறிக்கை கிடைத்த பிறகு சட்டப்படியான மேல் நடவடிக்கைகள் தொடர்புள்ள வர்கள் மீது எடுக்கப்படும்."

சட்டப்படி நடவடிக்கைகள்

அமைச்சர் அன்பழகன் விளக்கம்

இதுபற்றி அமைச்சர் க. அன்பழகன், செய்தியாளர்களுக்கு அளித்த கேட்டியில் கூறியதாவது:—

"இந்த மருந்து சாப்பிட்டதால் மிக மோசமான நிலையில் ஒரு குழந்தை கடந்த திங்கள் 10 ம் நாள் எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது; தீவிரமான சிகிச்சை அளித்தும் ஆறு நாட்களுக்குப் பிறகு அந்தக் குழந்தை இறந்தது; தொடர்ந்து இதேபோல மோசமான நிலையில் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு நான்கு

கைத்தறி நூல் கட்டுப்படு குறையும்

நூற்பாலைத் தலைவர் நம்பிக்கை

சென்னை, ஆக. 30—

கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 60-க்கும்—அதற்கு மேலும் உள்ள நபர்களில் உற்பத்தியாகும் முழு அளவு நூல்களை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொடுக்கும்படி கைத்தறி இயக்குனர் உத்தரவிட்டிருக்கிறார்; இந்நூல்கள், மாநில கூட்டுற நூல் வலை நிர்ணயக் குழு இந்த மாதம் விதித்துள்ள நூல் விலைப்படி விநியோகம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

"இதன் காரணமாகத் நட்டுப்பாடு கணிசமான அளவு குறையும்" என்று, சேலம் கூட்டுறவு நூற்பாலைத் தலைவர் திரு. ஜெயராமன் எம்.எல்.ஏ. நம்பிக்கை தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடாக ராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, ஸ்ரீவி அச்சகத்தில் (24, ஒலிவரதர் தெரு) அச்சிடப்பட்டு, சென்னை-1 லிருந்து வெளியிடப்பட்டது.

மருத்துவமனைகளின் நிர்வாகம்

மனிதாபிமான முறையில் நடைபெற வேண்டும்

கருத்தரங்கில் வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 30—

"மருத்துவமனைகளின் நிர்வாகம் மனிதாபிமான முறையில் நடத்தப்படுவது அவசியமாகும்.

"மருத்துவமனை நிர்வாகிகள் மருத்துவமனைகளின் தேவைகளைக் கவனிப்பதுடன், நோயாளிகள்--அவர்களின் உறவினர்கள்—துணையாளர்கள் ஆகியோர் எடுத்துக் கூறும் குறைபாடுகளையும் களைவதற்கு முயற்சித்தால் மருத்துவமனைகள் பொதுமக்களிடம் நல்லெண்ணத்தைப் பெற முடியும்"

என்று இங்கு நடைபெற்ற மருத்துவமனை நிர்வாகம் பற்றிய இரு வாரக் கருத்தரங்கில் உரையாற்றுகையில், சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் டாக்டர் பி. டியேஷ் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

தமிழ் மொழிக்கும்--தமிழர்களுக்கும் சம உரிமைக் கோரிக்கை

செப்டம்பர் இறுதிக்குள் ஸ்ரீலங்கா அரசு ஏற்க வேண்டுமென வலியுறுத்தல்

கொழும்பு, ஆக. 30—

ஸ்ரீலங்காவில் தமிழர் ஐக்கிய முன்னணி, அங்காட்டிலுள்ள தமிழர்களுக்காகத் தனிக் கொடியையும் — தனித் தேசியக் கீதத்தையும் தேர்ந்தெடுத்திருக்கிறது.

சிவப்பு நிறப் பின்னணியில்—தங்க நிறத்தில் உதய சூரியன் தனிக் கொடியில் இடம் பெறும்.

இலங்கைத் தமிழ்க் கவிஞர் பரமஹம்ச தாசனின் பாடல்களில் ஒன்று தேசியக் கீதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

"தமிழ் மொழிக்கும்—தமிழர்களுக்கும் சம உரிமைகள் என்ற முன்னணியின் கோரிக்கை: செப். இறுதிக்குள் ஏற்றாவிடில், காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ம் நாளை 'கோரிக்கை நாளாக'க் கடைபிடிப்பது என்று தமிழர் ஐக்கிய முன்னணியின் மத்தியக் குழு முடிவு செய்தது.

காந்தி பிறந்த நாளன்று தமிழர் பகுதிகளில் பொது வேலை நிறுத்தம் நடைபெறும்; பொதுக்கூட்டங்களில் தமிழர் கொடி ஏற்றப்படும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர்.

பத்தாண்டுகளுக்குமுன் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை மத்து இலட்சமாகும்.

இலங்கை அரசு இப்போது புதிதாகக் கொண்டுவந்துள்ள அரசியல் சட்டம் தமிழர்களுக்குப் பாதகமாக இருக்கிறது; இந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்காகத் தமிழர் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கின்றன.

கேட்கப்படும் தகவலைத்தரும் நிலையில் அஞ்சல்--தந்தித் துறை இல்லாதிருக்கக் கூடுமாம்

நடைமுறைகளைப் பின்பற்ற மத்திய அரசு தயக்கம்?

தமிழக அரசின் கோரிக்கைமீது விசித்திர வாதம்

புதுடில்லி, ஆக. 29—

'அஞ்சல் – தந்தி பற்றி மாநிலச் சட்டமன்றங்களில் கேள்வி கள் கேட்கக் கூடாது; அவை முறையிலும் இந்திய அரசின் தகவல் போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்டதாகும்"

என்று மத்திய தகவல் போக்குவரத்துத்துறை கூறியிருக்கிறது.

அண்மையில் தமிழ்நாடு அரசு கோரியதுபோலும் இதுபற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

"மத்திய அரசு அதிகாரங்கள் யூனியனில் ஒரு பிரச்சினை இருந்தபோதிலும், மாநிலங்கள் தொடர்பான அல்லது வட்டார அக்கறையுள்ள பிரச்சினைகள் சம்பந்தப்படுகிறபோது மாநிலச் சட்டமன்றங்களில் கேள்விகளை அனுமதிக்க அவசியம் ஏற்படலாமா" என்று மாநில அரசு கருத்துத் தெரிவித்திருந்தது.

மத்திய அரசின் அஞ்சல்-தந்தித்துறை சம்பந்தப்படாத பிரச்சினைகள் பற்றி மாநிலச் சட்டமன்றங்களில் கேள்விகளை அனுமதிக்க வேண்டாம் என்று 1969 ல் மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன; அத்தகைய கேள்விகள் அனுமதிக்கப்பட்டால், கேட்கும் தகவலைத் தரும் நிலையில் அஞ்சல்-தந்தித் துறை இல்லாதிருக்கக் கூடும் எனக் கூறப்பட்டது.

அஞ்சல்--தந்தித் துறை பற்றிய கேள்வி மைசூர் சட்டமன்றத்தில் அனுமதிக்கப்பட்டபோது இந்தப் பிரச்சினை முதலில் எழுந்து வரிசிலிக்கப்பட்டது.

அத்தகைய சந்தர்ப்பங்களில், இந்திய அரசின் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து தகவல் பெறப்படுவது இதுவரையில் நடைமுறையாக இருந்துவந்ததாக மாநில அரசு விவரித்தது.

அதைப்போல மாநில அரசு அதிகாரத்துக்கு உட்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டபோது, இந்திய அரசின் தொடர்புள்ள துறைக்கு மாநில அரசுகள் தகவல் கொடுத்து—அதேபோது, 'அந்தப் பிரச்சினை முழுவதும் மாநில அரசுக்கு உட்பட்டது' எனத் தெரிவித்தது.

இந்த நடைமுறை நீடிக்க மாநில அரசு விரும்புகிறது; தன் அதிகாரிகளுக்குப் புதிய சட்டமெயிட அஞ்சல் -- தந்தி யோர்டிடம் கூறப்பட வேண்டும் என்றும் அது விரும்புகிறது.

பின்வற்ற வேண்டிய கொள்கை பற்றி, சட்டத்துறை -- நாடாளுமன்ற விவகாரத்துறை ஆகியவற்றின் ஆலோசனைகள் கேட்கப்பட்டன; 'தங்கள் அலுவல்கள் பற்றிய பிரச்சினைகளில் தகவல் தர மறுப்பதற்கு அஞ்சல் -- தந்தித் துறைக்கு உரிமை உண்டு' என்று அவை ஆலோசனை கூறின.

'கடன் கிடைப்பதற்குள் வெறுப்பும் வேதனையும் அடைந்துவிட்டேன்'

இந்திரா காங்கிரசுக் கட்சி உறுப்பினர் கூற்று

புதுடில்லி, ஆக. 30—

பொது இன்குறைகளை நிறுவனங்களை மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:—

"வீடு கட்டுவதற்குக் கடன் தருமாறு கோரி ஆயுள் இன்குரன்ஸ் நிறுவனத்துக்கு மனு ஒன்று அனுப்பி இருந்தேன்: பல மாதங்களாக அதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை.

இந்தச் சமயத்தில், அந்த மனு பற்றி என்னிடம் ஒரு தகவலைச் சொன்னார்கள்; என்னுடைய மனு ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமானால், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு நான் சில ஆயிரம் ரூபாய்கள் இலஞ்சம் கொடுக்க வேண்டும் என்பதுதான் அது!

இது குறித்துத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் புகார் செய்தேன்; உடனே இது தொடர்பான அமைச்சரிடம் இந்திரா காந்தி பேசினார்.

அதன் பிறகுகூட உடனடியாக எனக்குப் பதில் வரவில்லை; மூன்று மாதங்களுக்குப் பிறகு, என் மனு குறித்து எனக்குக் கடிதம் வந்தது; மேலும் 3 மாதங்கள் கழிந்த பிறகுதான் கடன் அனுமதிக்கப்பட்டது.

இந்தக் கடன் கிடைப்பதற்குள் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு நான் வெறுப்பும் வேதனையும் அடைந்துவிட்டேன்."

ரூ. 23 இலட்சம்

மதிப்புள்ள பதுக்கல் தானியம் கைப்பற்றப்பட்டது

பெங்களூர், ஆக. 30—

"மைசூர் மாநிலத்தில் போலீசாரும்—உணவுப் பிரிவு துப்பறியும் துறையினரும் இம்மாதம் பல இடங்களில் சோதனைகள் நடத்தி, பதுக்கி வைக்கப்பட்ட ரூ. 23 இலட்சம் பெறுமானமுள்ள உணவு தானியங்களைக் கைப்பற்றினர்.

இந்தச் சோதனைகளின் பலனாகவும் -- பல இடங்களில் தானிய கேமிப்புகள் பார்வையிடப்பட்டதாலும் பதுக்கி வைக்கப்பட்ட தானியங்களின் விலை குறைந்துள்ளது.

சர்க்கரை விலை குவிண்டால் ரூ. 20 ஆக இறங்கியிருக்கிறது.

இந்தச் சோதனைகளின்போது சுமார் ரூ. 20,000 பெறுமானமுள்ள உணவுக்குப் பயன்படுத்தும் எண்ணெய் -- ரூ. 64,000 பெறுமானமுள்ள டயர்கள் -- பாட்டரி செல்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

பெங்களூர் நகரில் மட்டும் ரூ. 62,000 பெறுமானமுள்ள உணவுத் தானியங்கள் கைப்பற்றப்பட்டன.

விவசாயக் கல்லூரி

கேள்வி:—"புதுக் கோட்டையில் விவசாயக் கல்லூரி எப்போது அமைக்கப்படும்?"

பதில்:—"கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் இதனும் ஐல வகுதிகளை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது; அதன் பின்னர்தான் மற்றவை பற்றி யோசிக்கப்படும்"

நிர்வாக வசதிக்காக மாவட்டப் பிரிவுகள்

கேள்வி:—"கோவை -- மதுரை ஆகிய மாவட்டங்கள் போலீசு நிர்வாக வசதிக்காக இரு மாவட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன; இது போல் மற்ற மாவட்டங்களிலும் பிரிக்கப்படுமா?"

பதில்:—'இது பற்றி யோசிக்கலாம்."

கேள்வி:—'நகரச் சொத்து உச்சவரம்பு நேசிய அளவில் எல்லா மாநிலங்களிலும் கொண்டு வரப்படவேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து; அதுதான் நாங்கள் அமைத்த குழுவின் யோசனையுமாகும்."

பதில்:—"நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்ற யோசனை இருந்தாலும், நிதி வசதி -- அதிகாரிகள் நியமனம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உடனடியாக நிறைவேற்ற இயலாமல் இருக்கிறது."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஐ. ஜி) வெளிநாடு செல்வதால், செப். 15-ந் தேதி நடக்க வேண்டிய விழா, 18 ந் தேதி நடக்கிறது.

தனி மாவட்டமாகப் புதுக்கோட்டை ஆகுமா?

கேள்வி:—'புதுக் கோட்டை தனி மாவட்டம் ஆக்கப்படுமா?"

பதில்:—"நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்ற யோசனை இருந்தாலும், நிதி வசதி -- அதிகாரிகள் நியமனம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உடனடியாக நிறைவேற்ற இயலாமல் இருக்கிறது."